# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

# 1988 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, தேசிய மரபுவழிக்கானகை இடப்பரப்புச் சட்டம்

[1988, மார்ச் 04 ந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

1988, மார்ச்சு மாதம் 04 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 75 தபாற் செலவு : சதம் 75

## 1988 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, தேசிய மரபுவழிக்கானக இடப்பரப்புச் சட்டம்

[1988, மாச்சு 04 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 23/85
1771

**தேசிய மரபுவழிக்கானக இடப்பரப்புகளை வெளிப்படுத்துவதற்கும், அத்தகைய இடப்பரப்புகளைப் பாதுகாப்பதற்கும், பேணிக்காப்பதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டமானது, 1988 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, தேசிய மரபுவழிக்கானக இடப்பரப்புச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

தேசிய மரபு வழிக்கானக இடப்பரப்புகளை வெளிப்படுத்தல்.

2. (1) தனித்துவமான சூழற்றொகுதிகளையும், பிறப்புரிமையியல் சார் வளங்களையும், அல்லது பௌதிக, உயிரியல் உருவாக்கங்களையும் அல்லது விஞ்ஞானத்தின் அல்லது பாதுகாப்பின் கண்ணோட்டத்தில் சிறந்து விளங்கும் சர்வதேசப் பெறுமதி வாய்ந்ததும் அச்சுறுத்தப்படுவனவுமான விலங்கின, தாவர வகைகளை அவற்றின் இயற்கையான நிலையில் பேணிக் காக்கும் நோக்கத்திற்காகவும் இலங்கைக் கானகத்தின் எழிலை மேம் படுத்துவதற்காகவும் அதனை விஞ்ஞான ரீதியில் ஆய்வதனையும் அதனைப் பொதுமக்கள் துய்ப்பதனையும் ஊக்குவிப்பதற்காகவும், அமைச்சரானவர்—

(அ) சுற்றாடல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் ;

(ஆ) வன சீவராசிகள் பாதுகாப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சர் ;

(இ) கடற்றொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச் சர் ;

(ஈ) கமத்தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச் சர் ;

(உ) பண்பாட்டலுவல்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் ;

(ஊ) சுதேசிய வைத்தியம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர்.

ஆகியோருடனான கலந்தாலோசனையின் பின்னர் வர்த்தமானியில் வெளியிடப் படும் கட்டளைமூலம், அவரது அபிப்பிராயப்படி தனித்துவமான சூழற் றொகுதிகளையும் பிறப்புரிமையியல்சார் வளங்களையும் அல்லது வெகுமுனைப் பான இயற்கை அம்சங்களையும் கொண்டுள்ள, அரச காணியின் ஏதேனும் இடப்பரப்பை, தேசிய மரபுவழிக்கானக இடப்பரப்பொன்றாக வெளிப் படுத்தலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையெதுவும் சனாதிபதி யால் அங்கீகரிக்கப்பட்டு, பாராளுமன்றத்தினால் உறுதிப்படுத்தப்பட்டு, அத்தகைய அங்கீகாரமும் உறுதிப்படுத்துகையும் பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும்வரை பயனுறுதல் ஆகாது.

2—எ 099123—2895(09/87)

(3) தேசிய மரபுவழிக்கானக இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்தப்படவுள்ள இடப்பரப்பு ஒவ்வொன்றும் நில அளவையாளர் தலைமையதிபதியினால் அடையாளம் காணப்பட்டு உருவப்படத்தின் மூலம் பிரித்துச் சுட்டிக் காட்டப்படுதல் வேண்டும் என்பதுடன் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையெதுவும், அக்கட்டளை எந்த இடப்பரப்பைத் தொடர்புறுத்துகின்றதோ, அந்த இடப்பரப்புத் தொடர்பில் நில அளவையாளர் தலைமையதிபதியால் தயாரிக்கப்பட்ட உருவப்படத்தைக் குறிப்பீடு செய்தலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அம்சங்களுள் எதனையேனும் கொண்ட, அரச காணியல்லாத அசைவற்ற ஆதனம் எதுவும் இச் சட்டத்தின் நோக்கங்களுக்குக் கொள்ளப்படுவதற்கெனத் தேவைப்படுத்தப்படுமிடத்தும், அத்துடன் அமைச்சரானவர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் உத்தேசக் கொள்ளலை அங்கீகரிக்குமிடத்தும், அவ்வாதனம் பகிரங்க நோக்கமொன்றுக்குத் தேவைப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்கக் காணி கொள்ளல் சட்டத்தின்கீழ் கொள்ளவும் படலாம்.

*தேசிய மரபு வழிக்கானக இடப்பரப்புகளினுட் புகுவதை மட்டுப்படுத்துதல்.*

3. (1) தகுதிவாய்ந்த அதிகாரியைத் தவிர்ந்த வேறு ஆளெவரும்—

(அ) தகுதிவாய்ந்த அதிகாரியின் அறிவுறுத்தலின் மீது அல்லது அவரது எழுத்திலான அனுமதியுடன் அலுவலக முறையான ஏதேனும் கடமையை நிறைவேற்றும் நோக்கத்திற்காக ; அல்லது

(ஆ) தகுதிவாய்ந்த அதிகாரியிடமிருந்து பெற்ற எழுத்திலான அனுமதிப்பத்திரமொன்றின் அதிகாரத்தின்கீழும், அதன் நிபந்தனைகளுக்கிணங்கவும்—

தவிர, ஏதேனும் தேசிய மரபுவழிக்கானக இடப்பரப்பினுட் புகுதலோ அல்லது அதனுள் தங்கியிருத்தலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் "ஆ" என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் அனுமதிப்பத்திரமொன்று அதற்கான விண்ணப்பமொன்று செய்யப்படுவதன்மேல் தகுதிவாய்ந்த அதிகாரியால், அதிலுள்ள தாவரத்தை அல்லது விலங்கினத்தை அவதானிக்கும் நோக்கத்திற்காக அல்லது அத்தகைய அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விஞ்ஞான ஆய்வுகளை நடத்துவதற்காக மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும்.

*தேசிய மரபு வழிக் கானக இடப்பரப்புக்களில் தடை செய்யப்பட்ட செயல்கள்.*

4. (1) ஆளெவரும் தேசிய மரபுவழிக்கானக இடப்பரப்பொன்றில்—

(அ) ஏதேனும் தாவரத்தை, மரத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை அல்லது வேறு ஏதேனும் வன விளைபொருளை வெட்டுதல், அதிற் குறியிடுதல், அதன் கிளைகளை வெட்டுதல், பட்டையைக் கழற்றி வளையமேற்படுத்துதல், அரிதல், மாற்றியமைத்தல், சேகரித்தல் அல்லது அப்புறப்படுத்துதல் ;

(ஆ) ஏதேனும் மரத்திலிருந்து பட்டையை அல்லது இலைகளை வேண்டுமென்று உரித்தெடுத்தல் அல்லது ஏதேனும் மரத்தை வேறுவகையில் சேதப்படுத்துதல் அல்லது அதனைக் கையாளுதல் ;

(இ) புல்வெட்டுதல், அல்லது மந்தை மேய்த்தல் ;

(ஈ) நீரை தீழ்ப்புப்படுத்தல் ;

(உ) ஏதேனும் தாவரத்தை அகற்றுதல், வேரோடு பிடுங்குதல் அல்லது அழித்தல் அல்லது ஏதேனும் சேதம் அல்லது ஊறு விளைவித்தல் ;

(ஊ) ஏதேனும் தாவரத்தை விற்றல், விற்பனைக்கு வெளிக்காட்டி வைத்தல் அல்லது கொடைமுனைதல் ,

(எ) ஏதேனும் பறவையை அல்லது விலங்கைச் சுடுதல், பொறிவைத்துப் பிடித்தல் அல்லது கண்ணியிடுதல், தொல்லைப்படுத்துதல் அல்லது குழப்புதல் ;

(ஏ) ஏதேனும் பறவையை, மிருகத்தை அல்லது ஊர்வனவற்றை அல்லது அத்தகைய பறவையின், மிருகத்தின் அல்லது ஊர்வனவற்றின் ஏதேனும் பாகத்தை விற்றல், விற்பனைக்கு வெளிக்காட்டுதல் அல்லது கொடைமுனைதல் ;

(ஐ) ஏதேனும் பறவையின் அல்லது ஊர்வனவற்றின் ஏதேனும் முட்டையை அல்லது ஏதேனும் பறவையின் கூட்டை எடுத்தல் அல்லது அழித்தல் ;

(ஒ) ஏதேனும் வனவிலங்கிற்குக் குழப்பம் ஏற்படுத்துகின்ற அல்லது குழப்பம் ஏற்படுத்தும் சாத்தியமுள்ள ஏதேனும் துவக்கைச் சுடுதல் அல்லது வேறு ஏதேனும் செயலைப் புரிதல், அத்தகைய ஏதேனும் விலங்கின் இனப்பெருக்க இடத்தில் தலையிடுகின்ற அல்லது தலையிடும் சாத்தியமுள்ள ஏதேனும் செயலைப் புரிதல் ;

(ஓ) ஏதேனும் விலங்கிற்கு அல்லது தாவரத்திற்கு ஊறு விளைவிக்கும் அல்லது அதனை அழிக்கும் நோக்கத்திற்கென பயன்படுத்தப்படக்கூடியதான ஏதேனும் பொறியை அல்லது ஏதேனும் வெடிமருந்தை அல்லது நச்சுப் பதார்த்தத்தை தம்மகத்தே வைத்திருத்தல் அல்லது பாவித்தல் ; அல்லது

(ஔ) நிரந்தரமாகவாயினுஞ்சரி தற்காலிகமாகவாயினுஞ்சரி, ஏதேனும் கட்டிடத்தை நிறுவுதல் அல்லது அவ்வாறு நிறுவப்பட்ட ஏதேனும் கட்டிடத்தில் இருப்பாட்சி கொள்ளுதல் ;

(க) புதிய இட ஒழிப்புகளைச் செய்தல் ;

(ங) ஏதேனும் தீயைப் பற்றவைத்தல் அல்லது வைத்திருத்தல் அல்லது எடுத்துச் செல்லுதல் ;

(ச) ஏதேனும் வன உற்பத்திப் பொருளை ஏதேனும் உருவில் அப்புறப்படுத்துதல் ;

(ஞ) விவசாயத்திற்கென அல்லது வேறு ஏதேனும் தேவைக்கென ஏதேனும் காணியைத் துப்பரவாக்குதல் அல்லது அகழ்தல் ;

(ட) ஏதேனும் வீதியை நிர்மாணித்தல் ; அல்லது

(ண) ஏதேனும் சுவரை, குழியை, வரப்பை, வேலியை, செடி வேலியை, கழியடைப்பை அல்லது வேறு எல்லைக் குறியீட்டை சேதப்படுத்துதல் அல்லது மாற்றுதல் அல்லது அகற்றுதல்,

ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் (1) ஆம் பந்தியிலுள்ள எதுவும், இச்சட்டத்தின் நோக்கத்திற்கென தேசிய மரபுவழிக்கானக இடப்பரப்பிற்குள் ஏதேனும் கட்டிடத்தை நிறுவுவதிலிருந்தும் அதனை இருப்பாட்சி கொள்வதிலிருந்தும் தகுதிவாய்ந்த அதிகாரியை தடைசெய்வதாக வாசிக்கப்படுதலோ அல்லது பொருள்கொள்ளப்படுதலோ ஆகாது.

ஒழுங்கு விதிகள்.

5. (1) அமைச்சர், பின்வருவன தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) தேசிய மரபுவழிக்கானக இடப்பரப்புகளின் நிருவாகமும், முகாமையும் ;

(ஆ) தேசிய மரபுவழிக்கானக இடப்பரப்பொன்றின் தொடர்பில் 10 ஆம் பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்டதான ஒருங்கிணைக்கப்பட்ட முகாமைத் திட்டத்தின் அமுலாக்கம் ; அத்துடன்

(இ) விதிக்கப்படவேண்டுமென இச்சட்டத்தின் மூலம் தேவைப்படுத்தப்பட்ட அல்லது எக்கருமம் தொடர்பாக ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டதோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டதோ அத்தகைய ஒவ்வொரு கருமமும்.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்டபின்னர், வசதியான அளவு விரைவாக அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

(4) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனல், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஒழுங்குவிதி எதுவும், எத்தேதியன்று அவ்வாறு நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படவேண்டுமோ, அத்தேதி கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

6. இச்சட்டத்திலுள்ள எதுவும் ஆயுதந்தாங்கிய படைகளின் அல்லது பொலிசுப் படையின் உறுப்பினர் ஒருவரால் எழுத்திலான ஏதேனும் சட்டத்தால் அத்தகைய உறுப்பினருக்கு உரித்தாக்கப்பட்ட, அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவம், பணி அல்லது கடமை பிரயோகிக்கப்படுதலை, புரியப்படுதலை அல்லது நிறைவேற்றப்படுதலை பாதித்தல் ஆகாது. இச்சட்டத்தி லுள்ளது எதுவும் ஆயுதந் தாங்கிய படைகளினதும் பொலிசுப் படையினதும் உறுப்பினருடைய தத்துவத்தை, பணியை, கடமையை, அவர்கள் பிரயோகித்தலை, அத்துடன் புரிதலை, நிறைவேற்றுதலை பாதித்தலாகாது.

ஆயினும்: ஆயுதந்தாங்கிய படைகளின் அல்லது பொலிசுப் படையின் உறுப்பினர் ஒருவர் ஏதேனும் அத்தகைய தத்துவத்தை, பணியை அல்லது கடமையை பிரயோகிக்கையில், புரிகையில் அல்லது நிறைவேற்றுகையில் ஏதேனும் தேசிய மரபுவழிக்கானக இடப்பரப்பினுள் இச்சட்டத்தால் விலக்கப்பட்ட எவையேனும் செயல்களைப் புரியுமிடத்து அத்தகைய செயல்களுக்கெதிராக அவசியப்படக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தல் தகுதிவாய்ந்த அதிகாரியின் கடமையாதல் வேண்டும்.

7. வனப் பாதுகாவல் அதிகாரி, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரியாதல் வேண்டும். வன பாதுகாவல் அதிகாரி, தகுதிவாய்ந்த அதிகாரியாதல்.

8. வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக உள்ளது எது எவ்வாறிருப்பினும், தகுதிவாய்ந்த அதிகாரி, தேசிய மரபுவழிக்கானக இடப்பரப்பொன்று தொடர்பில் பின்வரும் கடமைகளுக்குப் பொறுப்பானவராதல் வேண்டும்:— தகுதிவாய்ந்த அதிகாரியின் கடமை.

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளால் அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதலும்; அத்துடன்

(ஆ) அத்தகைய தேசிய மரபுவழிக்கானக இடப்பரப்புகளை அவதானிப்பதற்கும், ஆய்வு செய்வதற்கும், துய்ப்பதற்குமான வசதிகளை ஏற்பாடுசெய்வதனை அல்லது மேம்படுத்துவதனை ஊக்குவித்தலும்.

9. அமைச்சரானவர் தகுதிவாய்ந்த அதிகாரியின் பணிகளை நிறைவேற்றுவது தொடர்பில், உசிதமானதென அமைச்சருக்குத் தோற்றக்கூடியவாறான பொது இயல்பினதொன்றான பணிப்புகளைத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு வழங்கலாம் என்பதுடன் அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல், தகுதிவாய்ந்த அதிகாரியின் கடமையாதலும் வேண்டும். தகுதிவாய்ந்த அதிகாரிக்குப் பணிப்புகள் வழங்குவதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.

10. (1) இரண்டாம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று நடைமுறைக்கு வந்ததன்பின்னர் கூடியவிரைவில்— ஒன்றிணைக்கப்பட்ட முகாமைத்திட்டம்.

(அ) வனபரிபாலனத் திணைக்களம்,

(ஆ) வனசீவராசிகள் திணைக்களம்,

(இ) கடற்றொழில் திணைக்களம்;

(ஈ) கமத்தொழிற் திணைக்களம்;

(உ) மத்திய சுற்றாடல் அதிகாரசபை;

(ஊ) பண்பாட்டலுவல்கள் திணைக்களம்; அத்துடன்

(எ) ஆயுர் வேதத் திணைக்களம்.

என்பனவற்றின் உதவியுடன் அத்தகைய கட்டளையால் வெளிப்படுத்தப்பட்ட தேசிய மாபுவழிக்கானக இடப்பரப்பு தொடர்பில் விதித்துரைக்கப்பட்ட முறையில் ஒன்றிணைக்கப்பட்ட முகாமைத்திட்டம் ஒன்றினைத் தயாரித்தல் வேண்டும்.

(2) ஒன்றிணைக்கப்பட்ட முகாமைத்திட்டம், எந்தத் தேசிய மாபுவழிக்கானக இடப்பரப்பு தொடர்பில் ஆக்கப்பட்டதோ, அந்தத் தேசிய மாபுவழிக்கானக இடப்பரப்புக்குள்ளாக, விதித்துரைக்கப்பட்ட முறையில் அமுலாக்கப்படுதல் வேண்டும்.

இச்சட்டம் எழுத்திலான சட்டத்திற்கு மேலோங்கி நிற்றல்.

11. அரசியலமைப்பு தவிர்ந்த எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளில் முரணுகை உள்ளது எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள், பயனுறுவனவாதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் எழுத்திலான அத்தகைய வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள், எழுத்திலான அத்தகைய வேறு சட்டத்தின் ஏற்பாடுகளிலும் மேலோங்கி நிற்றலும் வேண்டும்.

தவறுகளும் தண்டங்களும்.

12. இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு முரணுகைச் செயற்படும் ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவரால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருநூறு ரூபாவுக்குக் குறையாததும் இருபதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்கள்வரை நீடிக்கப்படக்கூடியதான ஒரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

பொருள் கோடல்.

13. இச்சட்டத்தில், சந்தருப்பம் வேறுவகையாக தேவைப்படுத்தினாலன்றி,—

"வன பாதுகாவல் அதிகாரி" என்பது (451 ஆம் அத்தியாயமான) வன பரிபாலனக் கட்டளைச் சட்டத்தின் 58 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட வன பாதுகாவல் அதிகாரி என்று பொருள்படும்;

"வன உற்பத்திப் பொருள்" என்பது (451 ஆம் அத்தியாயமான) வன பரிபாலனக் கட்டளைச்சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"மரம்" என்பது (451 ஆம் அத்தியாயமான) வன பரிபாலனக் கட்டளைச்சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

அத்துடன்

"வெட்டு மரம்" என்பது (451 ஆம் அத்தியாயமான) வன பரிபாலனக் கட்டளைச்சட்டத்திலுள்ள அதே பொருளை கொண்டிருத்தல் வேண்டும்.